* திரு. வி. கே. கோதண்டராமன் : சார், என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள சட்டப் பேரவையின் நடைமுறை விதிகளில் 42-வது விதியின்படி—கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். " மத்திய சர்க்காரின் ரிசர்வ் போலீஸ் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் இருங்கள். இதே காரியத்தைப் பற்றி கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுத்ததைப் படிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் வேறு விதியின்கீழ் வருகிறது. இது ஒத்தி வைப்புத் தீர்மானம் பற்றிய 42-வது விதியின் கீழ் வருகிறது.

(iii) கோவையில் மத்திய அரசு ரிசர்வ் போலீஸ் படையை வைத்தல்

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் ரிசர்வு போலீஸ் படையை திடீரென்று கோவையில் கொண்டுவந்து வைத்துள்ளதால் பொதுமக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ள விஷயத்தைப்பற்றி விவாதிக்க இச்சட்டப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்குமாறு கோரி, என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியைத் தருவதற்கு நமது விதி 50 (x)-ன் கீழ் இது எப்படி தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியம் என்பதைப் பற்றி நீங்கள் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தமிழக அரசுக்குப் பொதுவான ஒரு விதி, அல்லது மத்திய அரசுக்குப் பொதுவான விதி ஒரு பக்கம் இருந்த போதிலும் இன்றையதினம் கோவையிலே மத்திய சர்க்காருடைய ரிசர்வ் போலீஸ் படையைக் கொண்டு வந்து வைத்திருப்பதனுல் அங்கே உள்ள பொதுமக்கள் மத்தியிலேயும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மத்தியிலேயும் பொதுவாக இன்றைக்கு இருக்கிற ஒரு சூழ்நிலையிலேயும் இதைப் பற்றி, விவாதிக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக, ஹைதாராபாத்தில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய மாநாட்டிலே காங்கிரஸ் அல்லாத சர்க்காரை நடத்தவிடப் போவதில்லை, கவிழ்க்கப் போகின்ருேம் என்கிற ஒரு தீர்மானத்தைப் போட்ட பிறகு இந்தப் படையை இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிருர்கள். இந்தச் சர்க்காருக்கு ஊனம் ஏற்படுத்துவதற்கு அல்லது இந்தச் சர்க்காரைக் கவிழ்ப்பதற்கு அல்லது வேறு பல சூழ்ச்சிகளைச் செய்யக் கூடிய தன்மையிலே இந்தப் படை கொண்டு வந்து வைக்கப்பட்டு இருக்கிறதா என்கிற அளவுக்கு மக்கள் மத்தியிலே ஒரு சலசலப்பு ஏற்படுவது சகஜமே, நியாயமானதே. இதைப் போன்ற நிலைமைகள் இருக்கிற நேரத்தில் இந்த சர்க்கார்

இந்த விஷயத்திலே என்ன செய்திருக்கிறார்கள் ? இது விஷயமாக மத்திய சர்க்காரை ஏதாவது கேட்டிருக்கிறார்களா ? அல்லது இந்த சர்க்கார் கேட்டதன் காரணமாக மத்திய சர்க்கார் அந்தப் படையைக் கொண்டு வந்து அங்கே வைத்திருக்கிறார்களா என்பதைப் பற்றிய பிரச்சினை மிக முக்கியமானதாக இருக்கிற காரணத்தால் இது சம்பந்தமாக அவசரமும் முக்கியமும் அவசியமும் ஆன பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இதைக் கொண்டு வந்திருக்கிறேன், என்பதை கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் சட்டப்படி நடைபெறுகின்ற முறையைச் சேர்ந்தது. கனம் உறுப்பினர் அவர்களே, இதைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாலே அதற்குப் பதில் அளிக்கின்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலைமைகளைப் பற்றிச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த அவையை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்கத் தேவை இல்லை. இந்த அவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலின் மூலமாக தகவல்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கொடுத்துள்ள இது ஒத்தி வைப்புத் தீர்மானம் பற்றியது. அவர்கள் சொல்லியபடி இது முக்கியமானது என்பதை மறுக்க முடியாது. இது அவசியம் என்பதையும் மறுக்க முடியாது. ஆனால் 50 ( ) என்று ஒரு விதி இருக்கிறது. அதிலே 'தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியமாக அது இருத்தல் வேண்டும்' என்று இருக்கிறது. 'தமிழக அரசின் பொறுப்பில் அடங்கி உள்ள காரியமாக' என்று இல்லை.. தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியமாக அது இருக்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசின் ரிசர்வ் போலீஸ் படை என்பது தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கி இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியவில்லை. எனவே, இதற்கு என்னுடைய அனுமதி மறுக்கப்படுகிறது.

(iv) கீழ்பவானி பாசனப்பகுதியில் ஏற்பட்டுள்ள அவசரநிலை

திரு. க. ர. நல்லசிவன் : சட்டசபை விதி 42-ன் கீழ் வரும் இந்த ஒத்திவைப்பு பிரேரணையை சபையில் அனுமதிக்கக் கோருகிறேன்.

கீழ் பவானிப் பாசனப் பகுதியில் மீன் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்து விடாததாலும், கொள்முதல் அளவைப் பாதியாகக் குறைக்காததாலும், கீழ் பவானிப் பாசனத்தை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்காததாலும், அபிவிருத்தி வரியை ஒத்திவைக்காததாலும் ஏற்பட்டுள்ள அவசர நிலைபற்றி விவாதிக்க இச்சபையை ஒத்திவைக்கக் கோருகிறேன்.